**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 316/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -3 /PW- 2 |
| Name | : திரு. தாமோதரன் |
| Father/Husband's Name | : சிங்காரவடிவேலு |
| Village | : நெ.ஏ 25, கம்பர் தெரு |
| Taluk | : கோகுலபுரம், செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கோகுலபுரம், செங்கல்பட்டில் வசித்து மார்க்கெட்டில் காய்கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் நான் இல்லை. நான் வேலையில் இருந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இவ்வழக்கின் புகார்தாரர் யார் என்று தெரியாது.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது போலிஸ் விசாரணையில் 23.02.2022 அன்று பகல் 12.30 மணிக்கு வாத்தியார் தெரு வழியாக நானும், முரளிதரனும் சென்று கொண்டிருந்த போது எதிரே ஓடிவந்த ஆஜர் எதிரியை பிடித்தீர்கள் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று எனது தங்கையின் தாலி சரடை எதிரி அறுத்து சென்றார்

என்றாலும், அவரை நான் தான் மடக்கி பிடித்தேன் என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் 01.30 மணிக்கு எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. தாலி சரடின் ஒரு பகுதியான ½ சவரனை போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்தை பார்த்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இல்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 316/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 4/PW-3 |
| Name | : திரு. முரளிதரன் |
| Father/Husband's Name | : மோகன கிருஷ்ணன் |
| Village | : நெ.1, 4 வது தெரு, |
| Taluk | : கோகுலபுரம், செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கோகுலபுரம், செங்கல்பட்டில் வசித்து கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கோகுலபுரம், கம்பர் தெருவில் செயினை அறுத்து சென்றுவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. நான் அந்த பகுதியில் கவுன்சிலராக இருந்ததால் நான் காவல் நிலையத்தில் மனு எழுதி கொடுத்தேன். ஒரு பெண்மணிக்காக நான் அந்த மனுவை எழுதி கொடுத்தேன் அவரது பெயர் நினைவில்லை. எனக்கு சம்பவயிடத்தில் யார் இருந்தார்கள் என்று தெரியாது தகவல் தெரிந்து நான் காவல் நிலையம் தான் சென்றேன். சாட்சியிடம் இவ்வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள விவரங்களை தான் எழுதவில்லை என்று கூறுகிறார். என்னுடன் காவல் நிலையத்திற்கு அந்த பெண்மணியின் தம்பியோ, அண்ணனோ என்று தெரியவில்லை தாமு என்பவர் வந்தார். வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னால் அந்த செயினை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது போலிஸ் விசாரணையில் 23.02.2022 அன்று பகல் 12.30 மணிக்கு வாத்தியார் தெரு வழியாக நானும், தாமோதரனும் சென்று கொண்டிருந்த போது எதிரே ஓடிவந்த ஆஜர் எதிரியை பிடித்தீர்கள் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று தாமோதரனின் தங்கையின் தாலி சரடை எதிரி அறுத்து சென்றார் என்றாலும், அவரை தாமோதரன் எதிரியை மடக்கி பிடித்தார் என்றாலும் சரியல்ல. நான் அன்றைய தினம் சைட்டில் இருந்தேன். அன்றைய தினம் 01.30 மணிக்கு எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. தாலி சரடின் ஒரு பகுதியான ½ சவரனை போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்தை பார்த்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.